**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 379/2012**

**நாள்.22.04.2026**

**வா.சா. 1- ராமலட்சுமி**

**1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் பட்டா மாறுதல் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன். என்னுடைய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வழக்குச்சொத்து எனக்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் முத்தையா தலைவரும், பெரியசாமிதேவரும் சேர்ந்து மாரிராஜா தேவர் பெயருக்கு எழுதிக்கொடுத்தார்கள் அதன்படி எங்களுக்கு சொத்து கிடைத்தது. முத்தையா தலைவர், பெரியசாமிதேவர், மாரிராஜா தேவர் எனக்கு யார் என்றால் முத்தையா தலைவர் எனக்கு தாத்தா, பெரியசாமிதேவர் பெரியப்பா, மாரிராஜா தேவர் எனது அப்பா. முத்தையா தலைவரும், பெரியசாமிதேவரும் சேர்ந்து மாரிராஜா தேவர் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்ன ஆவணம் என்றால் உயில் ஆவணம். என் அப்பாவுக்கு உயில் மூலமாக சொத்து கிடைத்தது என்பதற்கு உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வழக்குச் சொத்தின் பட்டா மாறுதல் சம்பந்தமாக எனக்கும் எங்கள் ஊரைச் சேர்ந்த நம்பித்தேவர் என்பவருக்கும் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்படி நம்பித்தேவரை ஆரம்பத்தில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மேற்படி நம்பித்தேவரை இந்த வழக்கில் கட்சி சேர்த்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு இரு தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்து இந்த நீதிமன்றத்தால் தீர்ப்புரை பகரப்பட்ட பிறகு அதற்கு எதிராக மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் 4 வது பிரதிவாதி நம்பித்தேவர் இறந்துவிட்டார் என்ற விபரம் எங்களுக்கு தெரியவந்தது என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் பட்டா மாறுதல் சம்பந்தமாக எனக்கும் எங்கள் ஊரைச் சேர்ந்த நம்பித்தேவர் என்பவருக்கும் திருநெல்வேலி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு முடிவடைந்துவிட்டதா என்றால் தெரியாது.

வழக்குச் சொத்திற்கு சின்னத்தாய் என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. எனது தந்தை வழக்குச் சொத்திற்கு சின்னத்தாய் என்பவர் பெயரில் உள்ள பட்டாவை மாற்றம் செய்யக் கேட்டு வருவாய்த்துறையில் மனு கொடுத்து பட்டா மாற்றம் செய்ய முடியாது என மறுக்கப்பட்டுவிட்டது என்றால் ஆமாம். அதனால் தான் திருநெல்வேலி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து நிலுவையில் இருக்கும் போது இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். திருநெல்வேலி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து நிலுவையில் இருக்கும் போது இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் தான் 1 முதல் 3 பிரதிவாதிகளால் பட்டா மாற்ற முடியும் அதனால் நான் இந்த வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. 4 வது பிரதிவாதி நம்பித்தேவர் வாரிசுகள் தான் 5 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 5 முதல் 14 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் இடையிலான உரிமை சம்பந்தமாக பிரச்சனையில் 1 முதல் 3 பிரதிவாதிகளை இந்த வழக்கில் கட்சி சேர்த்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**5, 7, 9 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.22 18:52:49 +0530